# ஹெச். லாரன்ஸ் கல்ப், ஜூனியர், தலைமை நிர்வாக அதிகாரி, ஜெனரல் எலக்ட்ரிக் உடன் பிரதமரின் சந்திப்பு

ஜூன் 22, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி, ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி திரு. எச். லாரன்ஸ் கல்ப், ஜூனியரை சந்தித்தார்.

2. இந்தியாவில் உற்பத்தி செய்வதற்கான நீண்ட கால அர்ப்பணிப்புக்காக GE-ஐ பிரதமர் பாராட்டினார். பிரதம மந்திரி மற்றும் திரு. கல்ப், ஜூனியர் இந்தியாவில் உற்பத்தியை மேம்படுத்த GE இன் சிறந்த தொழில்நுட்ப ஒத்துழைப்பு குறித்து விவாதித்தனர்.

3. இந்தியாவில் விமானப் போக்குவரத்து மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் GE க்கு அதிகப் பங்கு வகிக்க பிரதமர் அழைப்பு விடுத்தார்.

**வாஷிங்டன் டிசி.**
**ஜூன் 21, 2023**